DMDUNMUNLAM

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 120 /2021</u>

**2023–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்ரமணியன் | தொழில் | : நடத்துனர் ஓய்வு |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : கோவிந்தசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : அரியலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | :68 /2023 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் பிறந்தது பொய்யூர் ஆகும். பொய்யூர் அரியலூர் அருகே உள்ளது. எனது தந்தை பெயர் கோவிந்தசாமி ஆகும். இவ்வழக்கில் உறவு முறை காட்டுவதற்கு வம்சாவளி பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது அம்மா பெயர் தனலட்சுமி ஆகும். அரியபுத்திரன் எனது தாத்தா என்றால் சரிதான். அவருடைய இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவும் செல்லம்மாள் என்பவரும் உடன் பிறந்தவர்கள் என்பதை காட்டும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.
2) செல்லம்மாள் அரியபுத்திரன் ஆகியோர் அத்தியூரில் இருந்தார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் லெனின் , தமிழரசி , கற்புக்கரசி ஆகியோர்களும் அத்தியூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் லெனினும் அவரது அண்ணன் ராஜேந்திரன் என்பவரும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாவா இடத்தை அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராஜேந்திரன், லெனின் ஆகியோர் சேர்ந்து ராமசாமி என்பவருக்கு கிரயம் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.
3) வழக்கு சம்பவத்திற்கு முன்பு ராமசாமி அவரது மனைவி தமிழரசி மற்றும் அவர்களது மகன் ரமேஷ் ஆகியோர் தாவா சொத்தில் உழவு செய்தது சம்பந்தமாக எனக்கும் அவர்களுக்கும் தகராறு நடைபெற்றது என்றால் சரிதான். அப்போது அவர்கள் தாங்கள் லெனின் மற்றும் ராஜேந்திரனிடமிருந்து சொத்து வாங்கியதாக கூறினார்கள் என்றால் சரிதான். ஊர்மக்களை வைத்து பேசும்போது லெனின்

மற்றும் ராஜேந்திரனிடமிருந்து கிரயம் வாங்கிய பத்திரத்தை காட்டியபோது நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக ராமசாமி மற்றும் ராஜேந்திரனை சேர்க்கவில்லை என்றால் சரிதான், நான் வழக்கு போடும் சமயத்தில் ராஜேந்திரன் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் ராமசாமி என்பவரும் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் ராமசாமியை தரப்பினராக சேர்க்காமல் அவரது மனைவியான தமிழரசி என்பவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ராமசாமி இறந்த விபரம் எனக்கு தெரியாது.

4) ஊர்மக்களை வைத்து பேசும்போது லெனினும் ராஜேந்திரனும் செல்லம்மாள் என்பவர் 1995 ம் ஆண்டு எழுதி கொடுத்த உயில் பத்திரத்தை கொண்டு வந்து என்னிடம் காட்டினார்கள் என்றால் சரிதான். நான் அந்த பத்திரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் வழக்கு போடும்போது அந்த உயில் செல்லாது என்று பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். உயில் படி பிரதிவாதிகள் அதன் அனுபவத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். செல்லம்மாள் , அரியபுத்திரன் ஆகியோர் அத்தியூரில் தான் இறந்தார்கள் என்றால் சரிதான். அவர்களின் இறப்புக்கு சென்றோம் என்றால் சரிதான்.

5) நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பட்டா எனது பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது. அந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகு நான் பட்டா எதுவும் எனது பெயரில் வாங்கவில்லை. பிரதிவாதிகள் சொல்வதுபோல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோதுதான் எனது பெயருக்கு பட்டா வழங்க உத்தரவு போடப்பட்டதாக சொன்னால் அது தவறு. வழக்கு நிலுவையில் இருக்கும்போது R.D.O இரண்டு முறை எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் அங்கு சென்று பார்த்துக்கொள்ள சொன்னார்கள் என்றால் சரிதான்.

6) ராமசாமி கிரயம் வாங்கியிருப்பதாக சொல்லும் நிலத்திற்கு 2 காடு தள்ளி தங்கவேலுக்கு நிலம் உள்ளது. R.D.O விசாரணைக்கு தங்கவேலுவும் என்னுடன் உதவிக்கு வருவார் என்றால் சரிதான். சுமார் 3 வருடத்திற்கு முன்பு மங்களமேடு காவல் நிலையத்தில் ராமசாமி மகன் ரமேஷ் உழவு செய்தது தொடர்பாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ராமசாமி காட்டின் அருகே தங்கவேலுவின் காடும் உள்ளதால் அதை கிரயம் பெற்றால் ஒரே சதுரமாக வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி கிரயம் வாங்கிய இடத்தின் நான்கெல்லை எனக்கு தெரியாது. ராஜேந்திரன், லெனின் வீடு கட்டியுள்ள இடத்தின் நான்கெல்லையும் எனக்கு தெரியாது.

7) செல்லமாளுக்கும் எனக்கும் எந்த உறவு முறையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. செல்லம்மாள் என் அம்மாவுடன் பிறக்கவில்லை என்று ஒரு முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் இல்லை அவ்வாறு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அரியுத்திரனுக்கும் எனக்கும் எந்த உறவு

முறையும் இல்லை என்றால் சரியல்ல. செல்லம்மாளின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. செல்லம்மாளுக்கும் எனக்கும் உறவு முறை இருந்திருந்தால் அவருடைய கணவர் பெயர் எனக்கு தெரிந்திருக்கும், அவ்வாறு எந்த உறவு முறையும் இல்லாததால் தான் அவருடைய பெயர் எனக்கு தெரியவில்லைஎன்றால் சரியல்ல. நான் செல்லமாளுக்கு தூரத்து சொந்தம் என்பதாலும் அவரின் இறப்புக்கு சென்றபோது அவருக்கு வாரிசு யாரும் இல்லை என்பதை தெரிந்து கொண்டு இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்திற்கு உயில் படி ராஜேந்திரன் மற்றும் லெனினுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் தங்கவேல் தூண்டுதலின்பேரில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் உண்மையான உரிமைதாரரை சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கேட்கும் அளவிற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் அரியுத்திரனுக்கும் செல்லமாளுக்கும் உள்ள நேரடி உறவுமுறை காட்ட ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றாலும் எனக்கும் அவர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM